தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

திங்கள் கிழமை, 1979 பிப்ரவரி 26.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. தகவல் கோரல்

(அ) பேரவைத் தலைவர் அமைச்சராகப் போவதாக பத்திரிகையில் வந்துள்ள செய்தி குறித்து.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இன்றைய செய்தித்தாளில் முக்கியமான செய்தியாக தாங்கள் அமைச்சராக வரப் போவதாக ஒரு நல்ல செய்தி வந்திருக்கிறது. அதற்காக திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக எனது மனமார்ந்த பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவைத் தலைவராக தாங்கள் கடைசி நாளாக இன்று வீற்றிருக்கப் போகிறீர்கள். ஆகவே, இன்றைக்கு அதிகமான துணைக் கேள்விகளுக்கு அனுமதி வழங்க வேண்டுமாய் கேட்டுக்கொள் கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய இந்த அவையில் காக்காய் பிடிக்கக் கூடாது என்பது அவை விதிகளில் ஒன்று.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு என் பேரில் என்ன கோபம் என்று தெரியவில்லை.

திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் காக்காய் பிடிக்கக் கூடாது என்று சொன்னார்கள். இங்கு காக்காய் வருவதற்கு வழியில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவர் அவர்களே, பாராட்டிப் பேசினால், காக்காய் பிடிப்பதாகச் சொல்லுகிறார்கள், அப்படியென்றால், எதிர்த்துப் பேசினால் என்ன சொல்லுவார்கள் ?